பக்கங்கள் 22+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | பங்குனி 16 ஞாயிற்றுக்கிழமை 30.03.2025 | அதிர்வு 239

**வெலிகம துப்பாக்கிச்சூடு:**

## டிரான் அலஸ்க்கு சி.ஐ.டி. அழைப்பாணை



2023 ஆம் ஆண்டு மாத் தறை, வெலிகம டபிள்யூ 15 ஹோட்டலில் நடத்தப் பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்ப வம் தொடர்பில் வாக்குமூலம் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# இலங்கையில் இனப்படுகொலை: ஏற்றுக்கொண்டுள்ளது பிரிட்டன்!

**முன்னாள் இராணுவத் தளபதிகளுக்குப் பயணத் தடை விதித்ததன் மூலம்**

(கி.வசந்தன்)

இலங்கையில் போர்க் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டனர் என்று முன்னாள் இராணுவத் தளபதிகள் சிலருக்குப் பிரித்தானியா பயணத் தடை விதித்துள்ளதன் மூலம் இனப்படுகொலை ஒன்று இங்கு நடந்துள்ளதைப் பிரித்தானியா ஏற்றுக்கொண்டுள்ளது என்று வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். 02



# அநீதியாகக் கொலை செய்யப்பட்டோருக்கு அநுர அரசு நீதியைப் பெற்றுக்கொடுக்கும்!

**வன்னி மாவட்ட எம்.பி. ஜெகதீஸ்வரன் உறுதிமொழி**

(கி.வசந்தன்)

“அநீதியாகக் கொலை செய்யப்பட்டவர்களுக்குத் தேசிய மக்கள் சக்தி அரசு நீதியைப் பெற்றுக் கொடுக்கும்.”

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றின்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், “தற்போது பலர் கைது செய்யப்படுகின்றார்கள். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவர் சந்தேகநபரே. அவர்களுக்குப் பிணை வழங்குவது என்பது சாதாரண நடைமுறை. அவர்கள் பிணையில் சென்றாலும் கூட வழக்குகள் தொடர்ந்து நடைபெற்று அவர்களுக்கான தீர்ப்புக்கள் வழங்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கான தண்டனைகள் கிடைக்கும்.

அப்போது அவர்கள் தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். பிணை என்பது பல வழக்குகளில் 02













## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதிக்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் இன்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், “இலங்கை அரசானது நீண்ட காலமாகப் பொறுப்புக்கூறலில் இருந்து தவறியுள்ளது. இதனால் நாம் சர்வதேச நீதி கோரி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இலங்கையில் போர்க் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டதாகச் சில இராணுவத் தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத் தடை விதித்துள்ளதன் மூலம் இனப்படுகொலை ஒன்று இங்கு நடந்துள்ளதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதை உணர முடிகிறது.

இவ்வாறு தடை விதிக்கப்பட வேண்டிய இன்னும் பல இராணுவத்தினர் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளும் உள்ளனர். அவர்கள் மீதும் இவ்வாறான தடைகளை விதிக்க வேண்டும். அனைத்துலக நாடுகளும் இந்தப் பயணத் தடைகளை விதித்து குற்றம் செய்தவர்களைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி சர்வதேச பொறிமுறையூடாக எமக்கான நீதியைப் பெற்றுத் தர வேண்டும். இதுவே எமது எதிர்பார்ப்பு.

இதேவேளை, 19 காணாமல்போன உறவுகள் உயிருடன் இருப்பதை தாம் கண்டுபிடித்துள்ளதாகக் காணாமல்போனவர்களுக்கான அலுவலகத்தினர் அண்மையில் கூறியுள்ளனர். அவர்கள் உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டோர் இல்லை. நாம் தந்த சாட்சியங்களில் ஒன்றைக் கூட அந்த அலுவலகத்தினர் கண்டுபிடிக்கவில்லை. மாறாக சர்வதேசத்துக்கு அப்பட்டமான பொய்களைச் சொல்கின்றனர். பொய்யான அறிக்கைகளை அவர்கள் வெளியிடுகின்றனர்.

எனவே, எமது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இந்தநிலையில் சர்வதேச நீதிப் பொறிமுறையூடாகவே எமக்கான நீதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றனர்.

## அநீதியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண விடயம். வழக்குகளில் போதிய சாட்சியங்களைப் பெற்றே விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். ஆகையால் தண்டனை நிச்சயமாகக் கிடைக்கும். இதில் அரசு உறுதியாக உள்ளது.

பட்டலந்த வதை முகாம் என்பது மக்களால் துன்பியல் சம்பவமாகக் கருதப்பட்ட விடயம். ஆனால், விசாரணைகள் என்பது கடந்த காலங்களில் எந்த அரசாலும் மேற்கொள்ளப்படவில்லை. அது உண்மையில் துப்பாக்கியமான ஒரு நிலைமை.

அதேநேரம், அநீதியாகக் கொலை செய்யப்பட்டவர்கள், பட்டலந்த சித்திரவதை முகாம் ஊடாக சித்திரவதை செய்யப்பட்டு மனிதத்துக்கு அப்பால் சென்று மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டவர்களுக்குரிய விசாரணைகள் இடம்பெறும். குற்றவாளிகள் அனைவருக்கும் தண்டனை வழங்கப்படும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி, நியாயம் நிச்சயமாகக் கிடைக்கும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்.” – என்றார்.

## டிரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் அமைச்சர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

மேற்குறித்த சம்பவம் தொடர்பில் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் விடயங்களை அறிந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவரை நாளை திங்கட்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகி வாக்குமூலம் பதிவு செய்யுமாறு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய அவர் நாளை திணைக்களத்தில் ஆஜராகி வாக்குமூலம் வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாத்தறை, வெலிகம டபிள்யூ 15 ஹோட்டலில் கடந்த 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வெள்ளை வான் ஒன்றில் வருகை தந்த சிலரை இலக்கு வைத்து வெலிகம பொலிஸாரினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது வானில் இருந்த இருவர் காயமடைந்த நிலையில் அதில் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில், குறித்த வானில் வந்தவர்கள் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் என மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது வெளிக்கொணரப்பட்டது. அத்துடன் சம்பவத்தின்போது உயிரிழந்தவர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவராவார்.

எவ்வாறாயினும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின்போது குறித்த அதிகாரிகளைச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அனுப்பப்பட்டமை சட்ட ரீதியானது அல்ல எனத் தெரியவந்தது.

அத்துடன் இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதற்கமைய இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

# விளையாடிக்கொண்டிருந்த சிறுமியின் சங்கிலி அறுப்பு

## வவுனியா நகர சபை பூங்காவில் சம்பவம்

(கி.வசந்தன்)

வவுனியா, நகர சபைப் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி ஒருவரின் சங்கிலியை இரண்டு பெண்கள் அறுத்துச் சென்றுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

வவுனியா, பூங்கா வீதியில் அமைந்துள்ள நகர சபை பூங்காவில் சிறுமி ஒருவர் விளையாடிக் கொண்டிருந்துள்ளார். இதன்போது அந்தச் சிறுமியின் அருகில் சென்ற இரண்டு பெண்கள் சிறுமியுடன் கதைப்பது போன்று கதைத்து விட்டு சிறுமி அணிந்திருந்த சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# கஞ்சா கலந்த மாவா பாக்குடன் யாழ்ப்பாணத்தில் இருவர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகரில் 9 கிலோ 300 கிராம் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இருவர் இன்று கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் உதவிப் பொலிஸ் பரிசோதகர் நந்தகுமார் குழுவினர் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கைதான 40 வயது மதிக்கத்தக்க இருவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





# செட்டிபாளையத்தில் சைவமணம் கமழ நடைபெற்ற சிவதீட்சை வழங்கும் நிகழ்வு

( வி.ரி.சகாதேவராஜா)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் மட்டக்களப்பு செட்டிபாளையத்தில் இன்று (30) ஞாயிற்றுக்கிழமை சிவ தீட்சை வழங்கும் நிகழ்வை சங்கத்தின் உப தலைவர் சைவப் புலவர் சிவானந்த ஜோதி ஞானசூரியம் தலைமையில் சைவமணம் கமழ நடத்தியது.

செட்டிபாளையம் சோம கலாநாயகி சமேத சோமநாத லிங்கேஸ்வரர் சிவன் ஆலயத்தில் சைவ சமய பிரச்சாரச் செயலாளர் சைவப்புலவர் வே. மகேச ரெத்தினம நெறிப்படுத்தலில் இந்த நிகழ்வு நடைபெற்றது .

தீட்சைகளை பிரபல குருக்கள் மு.கு.சச்சிதானந்தமூர்த்தி குருக்கள் வழங்கினார். தொடர்ந்து சான்றிதழ் நித்திய அனுஷ்டான விதி புத்தகம் என்பன வழங்கப்பட்டன.

7 வயதுக்குக் கூடிய ஆண், பெண் இருபாலருமாகச் சுமார் 100 பேர் கலந்துகொண்டு சிவ தீட்சை பெற்றனர்.













# அக்கரைப்பற்றில் வாகன நெரிசலை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை!

## மாநகர ஆணையாளர் பொலிஸாருக்கு அறிவுறுத்தல்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

றம்ழான் நோன்புப் பெருநாள் தினங்களில் அக்கரைப்பற்று மாநகர கடற்கரை பிரதேச வீதிகளில் வாசன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் அக்கரைப்பற்று பொலிஸாரைக் கேட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நோன்புப் பெருநாள் தினங்களில் அக்கரைப்பற்று கடற்கரைக்கு பெருந்தொகையான பொது மக்கள் வந்து பண்டிகையைக் கொண்டாடுவது வழக்கமாகும்.

இதன்போது வீதிகளில் நீண்ட வரிசையில் வாகனங்கள் நிறுத்தப்படுவதாலும் வீதிகளின் இரு பக்கமும் வாகனங்கள் செலுத்தப்படுவதனாலும் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன் விபத்துகளுக்கும் வாய்ப்பாக அமையும். இதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவர்.

எனவே, இப்பகுதியில் வாகன நெரிசல்களையும் விபத்துகளையும் தேவையற்ற அசௌகரியங்களையும் தவிர்த்து, பொது மக்கள் அமைதியான முறையில் பெருநாள் கொண்டாட்டங்களில் ஈடுபடும் பொருட்டு குறித்த வீதிகளில் முறையான பொறிமுறை ஒன்றினூடாக போக்குவரத்து ஒழுங்குமுறைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆணையாளர் நௌபீஸ் வலியுறுத்தியுள்ளார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அதிகரிக்கும் எயிட்ஸ்

நாட்டில் இளைஞர்களிடையே உயிர் கொல்லி நோயான எச்.ஐ.வி. தொற்றுக் குள்ளானவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுவ தாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு 15 முதல் 24 வயதுக் குட்பட்டவர்களில் 115 பேர் எச்.ஐ.வி. பாதிக்கப்பட்டவர்களாக அடையாளம் காணப்பட்டனர் எனத் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித் துள்ளது.

கடந்த வருடம் இலங்கையில் பதி வாகியிருந்த மொத்த எச்.ஐ.வி. தொற்றா ளர்களின் எண்ணிக்கை 824 ஆகும். அவர்களில் 718 பேர் ஆண்கள் ஆவர்.

கடந்த ஆண்டு பதிவான எய்ட்ஸ் இறப்பு எண்ணிக்கை 47 ஆக இருந்தது. எவ்வாறாயினும் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை 20 வீதம் குறைவாகும் என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

உயிரிழந்தோர் எண்ணிக்கை வீழ்ச்சி யுறுவதை வைத்து நிலைமை சீரடைவ தாகக் கொள்ள முடியாது என்கின்றன வைத்திய வட்டாரங்கள்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான எச்.ஐ.வி. தொற்றுகள் பதிவாகியுள்ளன எனவும் அதில் குறிப்பாக ஆண்களி டையே நோய் தொற்று அதிகரித்துள்ள தாகவும் கூறப்பட்டது.

உலகின் சவால் மிக்க தொற்றுநோய் களுள் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் பாதிப்பு முக்கியமானதாக இனங்காணப் படுகிறது. உலகம் முழுவதும் இத் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிக ரிப்பை காணமுடிகிறது. நவீன மருத் துவ சிகிச்சை முறைகளும், விழிப்பு ணர்வும் தொற்றுடன் வாழ்பவர்களுக்கு தன்நம்பிக்கையையும் வாழ்க்கைத் தரத் தையும் அதிகரித்திருந்தாலும், தொற்றா ளர்களின் அதிகரிப்பு இன்னும் அவசிய மான திட்டங்களுக்கான தேவையை உணர்த்துகிறது.

இந்த உயிர் கொல்லி நோயைக் கட்டுப் படுத்துவதில் இரண்டு விடயங்கள் முக் கியமானவையாக உள்ளன.

ஒன்று - தொற்றுப் பரவல் ஏற்படா மல் முன்கூட்டியே தவிர்ப்பு நடவடிக் கைகளை உறுதிப்படுத்திக் கொள்வது.

அடுத்தது - பிரதானமானது. சந்தே கத்துக்குரிய நபர்கள் தொற்றுக் குறித்து சோதனை நடவடிக்கைகளை தவறாமல் செய்து, நிலைமையை உறுதிப்படுத் துவது.

இந்த இரண்டிலும் நாட்டில் தீவிர கவனம் எடுக்கப்படுகின்ற போதிலும், தொற்றுப் பரவலுக்கான பாலியல் நடவடிக்கைகள் ஒளிவு மறைவாக இடம் பெறுகின்றமையால் பரவல் கட்டுப்படுத் தல் அடங்குவதாகத் தெரியவில்லை.

2023 ஆம் ஆண்டில் மட்டும் நாட் டில் 10 லட்சத்துக்கும் அதிகமான எச்.ஐ.வி. தொற்று சோதனை நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று கூறப்படுகின்றது. இது ஒரு வகையில் திருப்தி தரும் எண்ணிக்கையாயினும் தொற்றுப் பரவல் ஏற்படக்கூடிய சாத் தியமான இளவட்டங்கள் மட்டத்தில் இந்தத் தொற்று சோதனையும் தொற்று அடையாளப்படுத்தப்பட்டவர்களுக் கான மீட்பு நடவடிக்கைகளும் தவறா மல் தொடர்ந்து தீவிரமாக முன்னெடுக்கப் பட வேண்டும்.

எச்.ஐ.வி. என்பது ஒரு நபரின் உடல் கூறுகளை விட சமூக உளவியல் மற்றும் நெறிமுறை அம்சங்களை பாதிக்கும் ஒரு சமூகப் பிரச்சனை என்பதை இதை கையா ளுபவர்கள் மட்டுமல்லாமல் இந்தத் தொற்றினால் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய சமூக மட்டத்தினரும் உணர்ந்து கொள்வது முக்கியமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு இணங்க 2030 ஆம் ஆண்டளவில் எய்ட்ஸ் நோயை முடிவுக்குக் கொண்டுவருவதை இலங்கை இலக்காகக் கொண்டுள்ளது. எய்ட்ஸ் நோய்க்கு எதிரான போராட்டத் தில், எச்.ஐ.வி. பற்றி மக்களுக்கு கல்வி கற்பித்தல், ஆபத்தில் உள்ள நபர்களை பரிசோதித்தல் மற்றும் எச்.ஐ.வி. பாதிக் கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வசதிகளை வழங்குதல் உள்ளிட்ட பல விதமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத் துள்ளது.

எனினும் பாலியல் கல்வி இன்மை, விழிப்புணர்வு இன்மை மற்றும் சமூகப் புறக்கணிப்பு உள்ளிட்ட காரணிகளால் எச்.ஐ.வி., எயிட்ஸ் பாதிப்பு அதிகரிக் கிறது என்பதுதான் துரதிர்ஷ்ட நிலைமை.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## காரைதீவு தமிழரசு வேட்பாளர் அறிமுகக் கூட்டம்!

(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை தமிழரசுக் கட்சியின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற காரைதீவு பிரதேச சபைக்கான வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை (30) காரைதீவில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவுக்கிளை, விவேகானந்தவிளையாட்டு கழக தலைமையகத்தில் நடத்திய இந்தக் கூட்டத்தில், இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஜி. ஸ்ரீநேசன், டாக்டர் சி.ஸ்ரீநாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, அதிதிகளுக்கு காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது வேட்பாளர்கள் அறிமுகம் மற்றும் கலந்துரையாடல் என்பன இடம்பெற்றன.

கூடவே பிரதான வேட்பாளர்கள் கி.ஜெயசிறில், யோ.கோபிகாந், சு.பாஸ்கரன், சி.சிவகுமார் மற்றும் ஏனைய வேட்பாளர்களும் கலந்து கொண்டனர். பொது மக்களும் கலந்து கொண்டனர்.







## உள்ளூராட்சி தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்த செந்தில் தொண்டமான்!





(நூருல் ஹுதா உமர்)

பதுளை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சேவல் மற்றும் ரெலிபோன் சின்னங்களில் போட்டியிடுகின்ற நிலையில், தேர்தல் பிரச்சாரத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்தார்.

எல்ல பிரதேச சபைக்கு உட்பட்ட நமுனுகல, பிங்கராவ, இந்தகல ஆகிய தோட்டங்களிலும், ஹப்புதலை பிரதேச சபைக்கு உட்பட்ட ஹப்புத்தலை , பிளக்வூட், புதுக்காடு ஆகிய தோட்டங்களிலும், பண்டாரவளை பிரதேச சபைக்கு உட்பட்ட நாயபெத்த தோட்டத்திலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வெற்றியை உறுதி செய்யும் வகையில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.



## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# தேர்தல் பிரச்சாரங்களின்போது கலாச்சாரச் சீர்கேடான விடயங்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் இல்லை!

**நாபீர் பௌண்டேசனின் ஸ்தாபகர் உதுமான்கண்டு நாபீர் தெரிவிப்பு**

(அபு அலா )

சம்மாந்துறை பிரதேச சபையை முதலாம் இலக்க மாம்பழச் சின்ன சுயேட்சைக் குழு கைப்பற்றுமென்று நாபீர் பௌண்டேசனின் ஸ்தாபகரும் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான பொறியியலாளர் உதுமான்கண்டு நாபீர் தெரிவித்தார்.

சம்மாந்துறை நுஊஆ நிறுவன கேட்போர் கூடத்தில் இன்று (30) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாபீர் பௌண்டேசன் சார்பில் தெரிவாகும் உறுப்பினர்கள் யாரும் எவ்வித ஊதியங்களையும் பெறமாட்டார்கள். அவர்களின் வாழ்வாதாரத்துக்கு தேவையான நிதியை நாபீர் பௌண்டேசன் வழங்கும்.

மாட்டிறைச்சி விலையை குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதற்கான யுக்தி எங்களிடம் இருக்கின்றது. அதை நாம் இப்போது சொல்ல முடியாது. அவ்வாறு சொன்னால் பிற கட்சிகள் கொப்பி பண்ணிவிடுவார்கள்.

குறிப்பாக, பிரதேச சபை சட்டத்துக்கு அமைவாக சம்மாந்துறை பிரதேச மக்களும், ஏனையவர்களும் பயன் பெறும் பொருட்டு மரக்கறித் தோட்டங்கள் நிறுவப்படும். அதற்கான இடங்களை அடையாளங்கண்டு வைத்துள்ளோம்.

வெற்றிபெறும் எங்களது சுயேச்சைக்குழு எதிர் அரசியல் செயற்பாடுகளில் ஒருபோதும் ஈடுபடாது. ஏனைய கட்சிகளூடாக சபைக்குத் தெரிவாகும் உறுப்பினர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு சம்மாந்துறையில் புதிய அரசியல் கலாச்சாரம் தோற்றுவிக்கப்படும்.

எங்களின் தேர்தல் பிரச்சாரங்களின்போது போஸ்ட்டர்கள், பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள், மது போதை, அடிதடி போன்ற கலாச்சார சீர்கேடான விடயங்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் எங்களிடம் அறவேயில்லை. அந்த நடைமுறைகளை முற்றுமுழுதாக நாங்கள் புறக்கணிக்கின்றோம்.

சம்மாந்துறை மக்கள் எங்களுக்கான அதிகாரத்தை வழங்கினால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் மக்கள் நலன் திட்டங்களை ஆரம்பித்து குறைந்தது 2000 பேருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவோம்.

சம்மாந்துறை பிரதேச சபையை உதாரணம் கூறுமளவுக்கு சமூகங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த பல்வேறு திட்டங்கள் எங்களிடம் இருக்கின்றன.

எவ்வித அரசியல் அதிகாரங்களும் இல்லாமல் கடந்த 32 வருடங்களுக்கு மேலாக பல்வேறு சமூக நலன் சார்ந்த திட்டங்களை இன்றுவரை முன்னெடுத்து வருகிற நாபீர் பௌண்டேசனின் மீது சம்மாந்துறை பிரதேச மக்கள் மாத்திரமல்ல ஏனைய மாவட்டங்களிலும் உள்ள மக்கள் எங்கள் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளனர்.

அதற்கான ஆரம்பமே சம்மாந்துறை பிரதேச சபையை நாங்கள் கைப்பற்றும் செயற்பாடுகளுக்கு மக்கள் தீர்ப்பை வழங்கவுள்ளனர். நான் எப்போதும் மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளிப்பவன் என்ற அடிப்படையில் நாபீர் பௌண்டேசனின் பணிகள் தொடரவேண்டுமா? என்பதை மக்களே தீர்மானிக்கட்டும். அதனை மக்களது கரத்திலேயே விட்டுவிடுகின்றேன்.- என்று தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## தேர்தலில் பெண்களுக்கான பாதுகாப்பை தேர்தல் ஆணைக்குழு உறுதிப்படுத்த வேண்டும்

### தேசிய மக்கள் சக்தியின் பெண் வேட்பாளர் சிசோ குமார் விஜிதா

(ஹஸ்பர் ஏ.எச்.)

இந்த முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பெண்களுக்கான பாதுகாப்பை தேர்தல்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்த வேண்டும் என்று திருகோணமலை சோலையடி கிராமத்தை சேர்ந்த தேசிய மக்கள் சக்தியின் பெண் வேட்பாளர் திருமதி சிசோ குமார் விஜிதா தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இன்று (30) இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

பெண்கள் அரசியலுக்குள் வர வேண்டும் என்று தத்தளித்தாலும் அவர்களுக்கான பயிற்சிகள் கிராமப்புறம் தொடக்கம் கொழும்புவரை நடைபெறுகின்றன.

சில கட்சிகள் சரியான அங்கீகாரம் பெண்களுக்கு வழங்குவதில்லை.



இதன் காரணமாக சுயேட்சைக் குழு மூலமாகவும் களமிறங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆண்கள் அரசியலில் இறங்கினால் தனது காணியை அடகு வைத்தாவது ஈடுபடலாம். ஆனால் பெண்களின் பொருளாதார நிலை காரணமாக அரசியலில் இறங்க முடியாத நிலை காணப்படுகிறது.

பெண்களுக்கான பாதுகாப்பை தேர்தல் ஆணையாளர் விசேடமாக இந்த முறை அறிவிக்க வேண்டும். அரசியலுக்கு முன்வந்து இறங்கிய போதும் சில வேலையில் புகைப்படங்களை இட்டு வேறு வகையில் சம்பவங்களை நிகழச் செய்கின்றனர். ஆனால் பொலிஸ் பிரிவில் பெண்களுக்கான அமைப்பு இருக்கிறதா? நாங்கள் முறைப்பாடளித்தால் உடனே வருவார்களா? தீர்வைத் தருவார்களா? இல்லை. நாளை அல்லது அதன் பின்பே வருவார்கள்.

எனவேதான் பெண்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம். இலங்கையைப் பொறுத்தமட்டில் பெண்கள் தொகையில் 52 வீதமானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தேர்தலின் போது பெண்கள் பெண்களுக்கு வாக்களிப்பதில்லை. எனவேதான் அரசியலுக்காகப் பெண்களுக்கு எவ்வளவோ விழிப்புணர்வு பயிற்சிகளை வழங்கினாலும் பெண் பிரதிநிதித்துவம் என்பது குறைவாகவே உள்ளது.– என்றார்.

## அரசின் வாக்குறுதிகள் காற்றில் பறக்கின்றன!

### ஐ.ம.சக்தியின் அமைப்பாளர் வினோகாந்த் சாடல்

(வி.ரி.சகாதேவராஜா)

அரசு வழங்கிய வாக்குறுதிகள் இன்னும் வாக்குறுதிகளாக இருக்கின்றன . அவர்கள் வாய் மூலமான ஒரு அரசியலைத் தான் செய்கிறார்கள்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந்த் தெரிவித்தார்.

திருக்கோவில் ஆலையடிவேம்பு காரைதீவு நாவிதன்வெளி ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்புமனு தாக்கல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் உறுப்பினர்கள் இல்லாத ஐக்கிய மக்கள் சக்தி நிச்சயமாக இந்த முறை அதிகமான பிரதேச சபைகளுடைய அதிகாரங்களை கைப்பற்றும். அதில் எவ்வித மாற்றமுமில்லை.

இன்றைய அரசின் செயற்பாடுகளில் மக்கள் வெறுப்படைந்துள்ளார்கள்.

77 வருட சாபக்கேடு என்ற கோசத்தை முன்வைத்துதான் அவங்க அரசுக்கு வந்தார்கள். ஆனால் 77 வருடங்களாகவே இருந்த பொருள்களுடைய விலைகள் அவர்கள் வந்த பின்னர் இரண்டு மூன்று மாதங்களுக்குள் கிட்டத்தட்ட இருந்த விலையிலிருந்து இரண்டு மூன்று மடங்காக உயர்வடைந்து விட்டது.

எனவே பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி



காணப்படுவதாலும் இன்று மக்கள் மத்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ நம்பிக்கைக்குரிய ஒரு தலைவராக உருமாறி இருப்பதாலும் மக்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தி சார்ந்த வேட்பாளர்களுக்கு இம்முறை வாக்களித்து பிரதேச சபைகளுக்கு அனுப்புவார்கள் என்பதில் நாங்க அதிக நம்பிக்கை இருக்கிறோம்.

எனவே ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களிப்பதால் சமகாலத்தில் காணப்படக் கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் உட்பட நல்ல ஒரு சுபிட்சமான இலங்கை நாட்டை கட்டி எழுப்பக் கூடிய நிலைப்பாடு எங்களுக்கு ஏற்படும்.

எனவே அதற்கு அனைவரும் ஒத்துழைக்கும் படி மக்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். – என்றார்.

# புதுப்பொலிவு பெறும் அக்கரைப்பற்று மணிக்கூட்டு கோபுரம்!

(அஸ்லம் எஸ். மௌலானா)

மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாதிருந்த அக்கரைப்பற்று மணிக்கூட்டுக் கோபுரம் தற்போது வர்ணம் பூசப்பட்டு, புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக தனியார் பங்களிப்புடன் புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் புனரமைப்புப் பணிகளுக்காக அக்கரைப்பற்று மாநகர சபையின் எவ்வித நிதியும் பயன்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல், மோசமாக காட்சியளித்துக் கொண்டிருந்த இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தை புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்ட அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸுக்கு வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.







# சிறுவர் கழக உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டு செயலமர்வு!

## பிரதேச சிறுவர் சபையும் அங்குரார்ப்பணம்

(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக சிறுவர் பெண்கள் அபிவிருத்தி பிரிவு மற்றும் சமுர்த்தி பிரிவு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த சிறுவர் கழக உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாட்டு செயலமர்வும், பிரதேச சிறுவர் சபை அங்குரார்பண நிகழ்வும் பிரதேச செயலாளர் உ. உதயஸ்ரீதர் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வு உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரனின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

“உரிமைகளை பாதுகாப்போம் கடமைகளை செய்வோம்” வேலைத் திட்டத்தின் கீழ் கலைகள் மற்றும் அரங்க விளையாட்டுகளின் ஊடாக சிறுவர்களிடையே உள விருத்தியை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இந்தச் செயலமர்வு பல்வேறு கட்டங்களின் ஊடாக முழு நாள் பயிற்சிச் செயலமர்வாக இடம்பெற்றது.

இதன் முதற்கட்டமாக களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் அ.உதயசூரியா “ பொறுப்புள்ள இளமைப் பருவத்தின் முக்கியத்துவம்” எனும் தலைப்பிலான விழிப்புணவு கருத்துரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து சிறுவர்களிடையே திறன் விருத்தி செயற்பாடுகளினுடாக உளவிருத்தியை மேம்படுத்தும் வகையில் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ப. ராஜதிலகனால் சிறுவர்களிடையே பாடல் உருவாக்கம், கதை எழுதுதல், ஓவியம் வரைதல் மற்றும் விவாதம் முதலான செயற்பாடுகளுக்கான குழுமுறையிலான பயிற்சிகள் இடம்பெற்றன.

நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் கே. பிரணவன் கலந்துகொண்டு இந்த செயற்பாடுகளைப் பார்வையிட்டார்.

இறுதி நிகழ்வாக 2025-2027 ஆம் ஆண்டுக்கான புதிய பிரதேச சிறுவர் சபை, விருப்பு வாக்களிப்பு முறை மூலம் தெரிவு செய்யப்பட்டது.

சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களான ம.புவிதரன், செ.சக்திநாயகம் ஆகியோரால் சிறுவர் சபையில் அங்கத்துவம் பெறுவதால் கிடைக்கும் நன்மைகள் மற்றும் கடந்த கால சிறுவர் சபையின் செயற்பாடுகள் பற்றி கலந்து கொண்டவர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.









# அக்கரைப்பற்றில் நடைபெற்ற நோன்புப் பெருநாள் தொழுகை

(றிஸ்வான் சாலிஹூ)

அக்கரைப்பற்று அஹ்லுஸ்ஸுன்னாஹ் ஜும்ஆ பள்ளிவாசல் ஏற்பாடு செய்த சர்வதேச அடிப்படையிலான புனித நோன்புப் பெருநாள் திடல் தொழுகை அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்றது.

பெருநாள் தொழுகை மற்றும் பேரு ரையை அஷ்ஷேக் எம்.ஐ.அன் ஸார் (துப்லீகி) நிகழ்த்தினார். இதில் பெருந்திரளான ஆண்களும் பெண் களும் கலந்து கொண்டனர்.



இந்தப் பெருநாள் தினத்தில் அதிக மாக தர்மம் செய்யுமாறும் முஸ்லிம் உம்மத்தினர் தங்களது குடும்ப உறவு களுடன் நல்லுறவாகவும், ஏனைய சமூகத்துடன் ஒற்றுமை, சாந்தி சமாதானமாக நடக்க வேண்டும் என்றும் பிறருக்கு உதவுதல், வறுமையில் இருப்பவர்களை கண்டு முடியுமான வரை உதவுதல், தாய் தந்தையினரை அரவணைத்து நடத்தல் என்பது பற்றியும் தனது பெருநாள் பேருரையில் அஷ்ஷேக் எம்.ஐ.அன்ஸார் (துப்லீகி) வலியுறுத்தினார்.

# நீ. மரிய சேவியர் அடிகளாரின் நினைவு நாளும் பேருரையும்

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகர் அமரர் அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகளாரின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் (01) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் திருமறைக் கலாமன்றத்தால் நினைவுப் பேருரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், நினைவுப் பேருரையை 'அழகியல் : ஓர் ஆன்மீக நோக்கு நிலை' என்னும் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியரும் நுண்கலைத்துறை முன்னாள் தலைவருமான கலாநிதி திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணி ஆற்றவுள்ளார்.



# தலைசிறந்த அரசியல் தலைவராக மதிக்கப்பட்டவர் தந்தை செல்வா!

**(தமிழ்த் தேசியத்தின் தந்தை செல்வநாயகத்தின் 127 ஆவது ஜெயந்தி நினைவு நாள் நாளை. இதனை முன்னிட்டு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இன்று நிகழ்வுகள் நடைபெற்றன. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.)**

**- நடராஜன் ஹரன்**

தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சுயாட்சியை அமைத்துக் கொடுப்பதற்காக 30 வருட அகிம்சை வழிப் போராட்டத்தில் சாதித்தது என்ன என்பதை அன்னாரது 127 ஆவது பிறந்தநாளில் மீளாய்வு செய்வதன் மூலம் அவரது கொள்கையின் யதார்த்தத்தை புரிந்து கொள்ளலாம்.

'ஒற்றையாட்சி தமிழர்களை அழிக்கும்! சமஷ்டி ஆட்சியே ஐக்கியமாக வாழ வழி வகுக்கும்!' – தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனம்.

தமிழ் தேசியத்துக்கு 1949 இல் அடித்தளமிட்ட பெருந்தலைவர். அதை அடைவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியை நிறுவி மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகளை ஆராய்வது இன்றைய அரசியல் சூழ்நிலையில் பொருத்தமானதே.

இலங்கை அரசியலில் தலைசிறந்த நேர்மையான அரசியல் தலைவராக மதிக்கப்பட்ட தந்தை செல்வா சாமுவேல் ஜேம்ஸ் செல்வநாயகத்தின் அரசியல் தீர்க்கதரிசனம் 60 ஆண்டுகளின் பின்னரும் யதார்த்தமாக அரசியல் ஆய்வாளர்களால் நோக்கப்படுகிறது.

தொல்புரத்தைச் சேர்ந்த சாமுவேல் ஜேம்ஸ் வேலுப் பிள்ளைக்கும் அன்னம்மா கணபதிப்பிள்ளைக்கும் மூத்த மகனாக எமது செல்வநாயகம் மலேசியாவின் மிகவும் தூய்மையான நகரமான இல்போ நகரில் 1898 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி பிறந்தார். அவருக்குப் பின் வேலுப்பிள்ளை தம்பதியருக்கு இரண்டு புத்திரர்களும் ஒரு மகளும் பிறந்தார்கள். வேலுப்பிள்ளை தம்பதியினர் தமது மழலைச் செல்வங்கள் கல்வி கற்று மேன் மக்களாக விளங்க வேண்டும் என ஆசைப்பட்டார்கள்.

அக்காலகட்டத்தில் பாடசாலைகள் குறைவு. இருந்த சில நல்ல பாடசாலைகளும் அரச குடும்பத்தினரையும் பெரிய பணக்காரக் குழந்தைகளையுமே அனுமதித்தன. எனவே, வேலுப்பிள்ளை தம்பதியினர் தமது மழலைச் செல்வங்களை கல்வி கற்பதற்காக மலேசியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார்கள். அப்பொழுது எமது கதாநாயகன் செல்வநாயகத்துக்கு வயது நான்கு. தனது இரண்டு சகோதரர்களுடனும் ஒரு சகோதரி யுடனும் மலேசியாவிலிருந்து கொழும்புக்கு கப்பலில் வந்திறங்கினார் பாலகன் செல்வநாயகம். அப்போது கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு ரயில் சேவை ஆரம்பிக்கப்படாமையால் மீண்டும் கப்பலிலேயே காங்கேசன்துறைக்கு வந்து தமது சொந்த ஊரான தெல்லிப்பழைக்கு வந்தார். அங்கு அமெரிக்க மிஷன் பாடசாலையில் 5 ஆம் வகுப்பு வரை கல்வி பயின்றார். இந்த அமெரிக்க மிஷன் பாடசாலை தான் பின்பு யூனியன் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டது கவனத்துக்கு உரியதாகும். சிறு வயதிலே செல்வநாயகம் பெண் வேடம் பூண்டு நாடகங்களில் நடித்தாராம்.

ஐந்தாம் வகுப்பிற்குப் பின்னர் செல்வநாயகம் யாழ்ப் பாணம் சென்று சென்.ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்து சீனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சைக்குப் படிக்கத் தொடங்கினார். பின்னர் மாமனார் எஸ்.கே. பொன்னுசாமியின் உதவியுடன் கொழும்பு சென். தோமஸ் கல்லூரியில் சேர்ந்து தமது கல்வியைத் தொடர்ந்தார்.

சென். தோமஸ் கல்லூரியில் ஏறத்தாழ ஒன்றரை வருட காலம் கல்வி கற்று இன்டர்சயன்ஸ் பரீட்சையில் தேறிய செல்வநாயகம் தனது தம்பிமாரைப் படிப்பிப்பதற்காக 1917 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.



ஆசிரியராக இருந்துகொண்டே லண்டன் பல்கலைக் கழக பி.எஸ்.ஸி. விஞ்ஞானப் பட்டப் பரீட்சைக்கு வெளி வாரி மாணவனாகத் தோற்றி அடுத்த ஆண்டே அதாவது, 1918 இல் சித்தி எய்தினார்.

இத்தருணத்தில் மலேசியாவிலிருந்த அவரது தந்தை யார் சுகவீனமுற்றிருந்தமையால் அவரைப் பார்க்க மலேசியா சென்று சுமார் ஒரு மாதம்வரை தங்கியிருந்து மீண்டும் திரும்பினார். ஆனால், என்ன பரிதாபம்! செல்வ நாயகம் இலங்கை திரும்பி வந்த ஓரிரு வாரங்களிலேயே அன்னாரது தந்தையார் மலேசியாவில் காலமானார்.

அதனால் குடும்பப் பொறுப்பு அனைத்தும் இளைஞ ரான செல்வநாயகத்தின் மேல் சுமத்தப்பட்டது. தமது பிற்காலத்தில் இலங்கைத் தமிழினத்தின் பொறுப்பெல்லாவற்றையும் சிரமேற் கொண்ட தமிழ்த் தந்தைக்கு, தந்தையில்லாத குடும்பத்தின் பொறுப்பைச் சுமப்பதா பெரிய காயம்! இரண்டு தம்பிமாரையும், அருமைத் தங்கையையும் அரவணைத்துக் கொண்டு கொழும்பு சென். தோமஸ் கல்லூரியில் தமது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார்.

எனினும், அன்னாருக்கு சோதனை தொடர்ந்தது. யாழ்ப்பாணத்தில் அவரது இளைய சகோதரருக்கு கடும் சுகவீனம்.

அவரைப் பார்ப்பதற்கு தெல்லிப்பழை செல்ல லீவு கேட்டார், லீவு மறுக்கப்பட்டது. ஆசிரியர் பதவியை இராஜி னாமா செய்துவிட்டு தெல்லிப்பழைக்குச் சென்றார்.

தம்பியை நன்கு பராமரித்தும் என் செய்வது? பலனில்லாமல் போய்விட்டது. அருமைத்தம்பி இராஜ சுந்தரம் தமது பதினைந்தாவது வயதில் காலமானார்.

**தொடர்ச்சி▼**

# தலைசிறந்த அரசியல் தலைவராக மதிக்கப்பட்டவர் தந்தை செல்வா!

தொடர்ச்சி▲

தம்பியின் இறுதிச் சடங்கு முடிந்து மீண்டும் கொழும்பு வந்த செல்வநாயகம், வெஸ்லி கல்லூரியில் ஆசிரியரானார். எஸ்.ஜே.வி. ஆசிரியனாக இருந்த காலத்தில் நல்லாசிரியன் என்ற பெயரை, பெற்றோர், ஆசிரியர், மாணவர்களிடம் பெற்றார். பிற்காலத்தில் நல்ல, நேர்மையான சட்டத்தரணி என்று பெயரும் புகழும் பெற்றாரோ, அரசியலில் நுழைந்த பின்னர் எவ்வாறு உலக மக்கள் அனைவராலும் தமிழ் பேசும் மக்களின் தன்னிகரில்லாத் தலைவன் என்றும், நேர்மையான அரசியல்வாதி என்றும் பெயரும் புகழும் பெற்றாரோ அதே போல அவர் நல்லாசிரியன் என்று பெயரும் புகழும் பெற்றதில் எவ்வித ஆச்சரியமும் இருக்க முடியாது என்பது திண்ணம்.

அந்தக் காலத்தில் செல்வா ஆசிரியராக உலா வந்தபோது அன்னாரது நடை, உடை, பாவனையைப் பின்பற்றிய மாணவர்கள் பலர். அதிகம் ஏன்? அவரது நடு உச்சி தலைவாரும் பழக்கத்தைக் கூட வெஸ்லிக் கல்லூரி மாணவர்கள் கொண்டிருந்தார்கள் என்றால் பாருங்களேன்.

1918 ஆம் ஆண்டு விஞ்ஞானப் பட்டதாரியான செல்வநாயகம் ஆசிரியராக இருந்த போதே சட்டக்கல்லூரியில் சேர்ந்து 1924 ஆம் ஆண்டு சித்தியெய்தி சிவில் சட்டத்துறையைத் தேர்ந்தெடுத்து சட்ட வல்லுநரானார். அத்தொழிலில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தினார். அப்போதெல்லாம் தமது வாழ்நாள் இலட்சியம் சுப்பிரிம் கோர்ட்டுக்கு நீதியரசராவதே என்று கூறுவது உண்டு.

எஸ்.ஜே.வி. புகழ்பெற்ற சட்டத்தரணியாக இருந்த காலத்தில் அன்னாரது ஜுனியராக இருந்து பிற்காலத்தில் பிரபல சட்டத்தரணி களாகிய சிலரை இங்கு பார்ப்பது சாலச் சிறந்ததாகும்.

பிரதம நீதியரசர் பதவி வகித்த நெவில் சமரகோன், எஸ். சர்வானந்தா, இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தந்தை எட்மண்ட் விக்ரமசிங்க, வி. நவரட்ணராஜா, சி.இரங்கநாதன் ஆகியோருக்கு, இவ்வாறு புகழ்பூத்த சட்டத்தரணியாக இருந்த செல்வா அரசியலில் நுழைந்தது அவர்களது போதாத காலமாக இருக்கலாம். ஆனால், அந்த நிகழ்ச்சி ஈழத்து தமிழினத்தின் தவப்பேறாகும்!

1944 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி கொழும்பு சைவமங்கையர் கழக மண்டபத்தில் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அங்குரார்ப்பண கூட்டத்தில் செல்வா கலந்து கொண்டார். தொடர்ந்து சோல்பரி கமிஷன் முன் ஜி.ஜி. சாட்சியமளித்த போது செல்வா அருகிலிருந்து தம்மாலியன்ற பங்களிப்பை வழங்கினார்.

1947இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எஸ்.ஜே.வி.யின் பங்களிப்பு அளப்பரியது. தமிழ்க் காங்கிரஸ் யாழ். குடாநாட்டில் ஏழு வேட்பாளர்களும் கிழக்கு மாகாணத்தில் இரண்டு வேட்பாளர்களுமாக மொத்தம் ஒன்பது வேட்பாளர்களை நிறுத்தியது. தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஜி.ஜிக்கு அடுத்தபடியாக எஸ்.ஜே.விதான் பிரதம பேச்சாளர். தமக்கே உரித்தான மெல்லிய உடல் வாகுடன் மென்மையாக ஆறுதலாக ஆனால், உறுதியாக நிறுத்தி, நிறுத்தி அவர் பேசிய உரைகள் அனைவரையும் பெரிதும் கவர்ந்தன.

அந்தத் தேர்தலில் எஸ்.ஜே.வி. காங்கேசன்துறையில் போட்டி போட்டு வெற்றி பெற்றார். யாழ். குடாநாட்டில் ஆறு தொகுதிகளில் தமிழ் காங்கிரஸ் பெரு வெற்றியீட்டியது. எஸ்.ஜே.வி.யின் ஜுனியராகக் கடமையாற்றிய கோப்பாய் கோமான் கு. வன்னியசிங்கம் கோப்பாய் தொகுதியில் பெரு வெற்றியீட்டினார்.



ஜி.ஜி.க்கு கைத்தொழில் அபிவிருத்தி, கடற்றொழில் அமைச்சு வழங்கப்பட்டது. ஜி.ஜி.யுடன் கே. கனகரத்தினம் (உதவி மந்திரிப் பதவி), சி.இராமலிங்கம், வி.குமாரசாமி போன்றோர் அரசுடன் இணைந்தனர். செல்வநாயகம், வன்னியசிங்கம், சிவபாலன் ஆகியோர் அரசுடன் இணைய மறுத்துவிட்டனர்.

1948 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஜி.ஜி. அமைச்சராகி அரசுடன் இணைந்தார். அன்றிலிருந்து தமிழ்க் காங்கிரஸ் ஜி.ஜி. குழு, செல்வநாயகம் குழு என இரண்டாகப் பிரிந்து வெள்வேறாகக் கூட்டங்களும் நடத்தத் தொடங்கினர். அக்காலகட்டத்தில் செனட்டராக இருந்த இ.எம்.வி. நாகநாதன், செல்வநாயகம் குழுவில் இணைந்து கொண்டார்.

தொடர்ந்து தமிழரசுக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டதும் தன்னிகரில்லாத் தலைவராக தந்தை எஸ்.ஜே.வி. விளங்கியதும், பின்னர் நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் அன்னார் வெற்றி பெற்றதும் அனைவரும் அறிந்ததே.

பெரியவர் செல்வநாயகம் தமிழர் விடுதலைக்காக, தமிழ் மக்கள் அமைதியாக தமது தாயகத்தில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக இறுதி வரை ஒரு சத்தியாக்கிரகியாக, ஊழலற்ற வாழ்க்கையைக் கடைப்பிடித்தார். அமரர் செல்வநாயகத்தின் தீர்க்க தரிசனமான பண்டா – செல்வா ஒப்பந்தத்தையோ அல்லது பண்டா – டட்லி ஒப்பந்தத்தையோ மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் நிறைவேற்றி இருந்தால் எத்தனை பொருள் இழப்புகள், உயிர்ச் சேதங்கள், அனர்த்தங்களை இந்த நாடு தவிர்த்திருக்கும்.

சோல்பரியின் ஒற்றையாட்சி தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும், மாற்று அரசியல் அமைப்பு எமக்குத் தேவை. பல்லின, பலமத, பலமொழி பேசும் மக்கள் வாழும் நாடுகளுக்கு பொருத்தமான அரசியல் அமைப்புத் திட்டம் ஒன்று உள்ளது.

அமெரிக்கா, கனடா, சோவியத்யூனியன், ஆஸ்ரேலியா, இந்தியா, சுவிஸ் உட்பட பலநாடுகளில் அத்திட்டம் நடைமுறையில் உள்ளது. அதுதான் சமஸ்டித் திட்டம் என்றார் தந்தைசெல்வா.

தமிழ் மக்களுக்கு மாற்று அரசியல் திட்டம் வேண்டும் என்பதை 1949 இல் உணர்ந்தார். சோல்பரி அரசியல் திட்டத்தை தீவிரமாக எதிர்த்தார். அதற்கான மாற்றுத் திட்டம் பற்றி பல அரசியல் நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

1949 ஜனவரி இரண்டாம் வாரத்தில் கொள்ளுப்பிட்டியில் உள்ள தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சமஸ்டி அரசியல் திட்டத்தை தந்தை செல்வா சமர்ப்பித்தார். அங்கு குழுமியிருந்த வன்னியசிங்கம் உட்பட பல சட்டவல்லுனர்கள் அதை விவாதித்து ஏகமனதாக அங்கீகரித்தனர்.

மேலும் தந்தை செல்வா அளித்த விளக்கங்கள் ஒற்றையாட்சி முறை, சிங்களவர்கள் தமது சனத்தொகைப் பலத்தை உபயோகித்து தமிழ் இனத்தை அடக்கி ஆள்வதற்கு வசதியளிக்கும்.

ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாடுகளில் ஒவ்வொரு இனமும் தாம் பெரும்பான்மையாக வாழும்

தொடர்ச்சி▼

# தலைசிறந்த அரசியல் தலைவராக மதிக்கப்பட்டவர் தந்தை செல்வா!

தொடர்ச்சி▲

இடங்களில் தம்மைத் தாமே ஆட்சி புரிய அனுமதிக்கப்படு கின்றனர். ஆனால் அவரவர்கள் சுதந்திர தனியரசாக இயங்குவதில்லை. சமஸ்டி அமைப்பாக இயங்குகின்றன.

அத்தகைய சமஸ்டி அமைப்புத்தான் இலங்கைக்குத் தேவை. தமிழர்களுக்கு ஒரு சுயாட்சி, தனியரசு வேணும் என்பதை 60 வருடங்களுக்கு முன்னர் கூறியது இன்றும் யதார்த்தமாக நோக்கப்படுகிறது.

இந்த இலட்சியத்தை அடைவதற்கு 30 வருட காலமாக அகிம்சைவழிப் போராட்டம் நடத்தினர். அதனால் ஏற்பட்ட பலாபலன்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை 1948 இல் இருந்து, முதலில் நாடாளுமன்ற மேடையைச் சரியாகப் பயன்படுத்தி ஜனநாயக வழிகளில் தனது கருத்துக்களை முன்வைத்தார்.

அரசியலில் தமிழர் பிரச்சினைகளில் எவ்வளவு தெளிவாகவும் உறுதியாகவும் ஆணித்தரமான கருத்துக் களை சிங்களத் தலைவர்களுக்கு அச்சமின்றி எடுத்துக் கூறிய துணிவுமிக்க பெருந்தலைவர் தந்தைசெல்வா.

அவர் 1948 இல் இருந்து நாடாளுமன்றத்தில் ஆற்றிய எழுச்சி உரைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. நாடாளுமன்றம் மூலம் போராடிய வரலாறு இதுவாகும்.

தேசியக்கொடி குடியுரிமை மசோதா (19-08-1948) நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்த மசோதா, இந்திய பாகிஸ்தானியர் குடியிருப்போர் பிரஜா உரிமைச் சட்டம், அரச கரும மொழி மசோதா, அரச கரும மொழி இரண் டாவது ஆகிய எழுச்சி உரைகள் ஒரு நூலாகவும் வெளிவந்துள்ளது. இந்த எழுச்சி உரைகள் கேட்ட சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

ஜனநாயக வழியில் போராடிப் பெறக்கூடிய திட்டமே சமஸ்டி அரசியல் திட்டம். இந்த அரசியல் திட்டத்தை நன்கு விளங்கிய எஸ்.டபிள்யு. பண்டாரநாயக்கா, ஆட்சிப் பீடத்தைப் பிடிப்பதற்காக ஒரு இனவாத அரசியல்வாதியாக மாறி நியாயத்துக்கு மாறாக ஆட்சி நடத்தினார்.

தந்தை செல்வா இலங்கையில் உள்ள பல இன மக்களும் ஐக்கியமாக வாழக்கூடிய சமஸ்டி அரசியல் அமைப்பை வென்றெடுப்பதற்கு 30 வருடமாக அகிம்சை வழியில் போராடி வந்தார்.

1951 ஆம் ஆண்டு வரலாற்றுப் பெருமை பெற்ற திருகோணமலையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டில் தந்தை செல்வாவின் தலைமையில் நிறைவேற்றிய தீர்மானம்.

பரிபூரண அரசியல் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு ஒவ்வொரு இனத்துக்கும் பிரிக்கவொண்ணாத உரிமை உண்டு என்பதாலும், அவ்வுரிமையின்றி அவ்வினத்தின் ஆன்மீக, கலாச்சார, தார்மீகப் பொலிவு சீரழிந்து விடும் என்பதாலும்,

இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம் என்று கணிப்பதற்கான ஒவ்வொரு அடிப்படைத் தகுதிகளிலும் அதாவது முதலாவதாக குறைந்த பட்சம் சிங்கள மக்களை ஒத்த அளவுக்காவது புராதனமானதும் புகழ் செறிந்ததுமாக இத்தீவில் தனியொரு வரலாற்றாலும்,

இரண்டாவதாக ஒப்பற்றதோர் இலக்கியப் பாரம் பரியத்துடனும், இந்தக் காலத் தேவைகள் அனைத்துக் குமே போதுமானதாக தமிழ்மொழியை இலங்கச் செய்யும் நவீன வளர்ச்சியுடனும் விளங்குவதுதான் சிங்களவர்களின் மொழியினின்றும் முற்றாக வேறுபட்ட தனியொரு மொழிவாரி மக்கள் என்ற உண்மையில்,

இறுதியாக இத்தீவின் மூன்றிலொரு பாகத்தை மேவிச் செறிந்துள்ளதான குறிப்பிடத்தக்க நிச்சயமான நிலப்பரப்பில் வசிக்கும் மக்கள் அவர்கள் என்ற காரணத்தாலும் சிங்களவர்களில் இருந்து வேறுபட்ட ஒரு தனியினமாக அவர்கள் விளங்குகின்றார்கள் என்பதாலும்,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எம் முதலாவது தேசிய மாநாடு இலங்கைத் தமிழ் பேசும் இனத்துக்கு எனப் பிரிக்க முடியாத அவர்களின் அரசியல் சுயாதீன உரிமையைக் கோருவதில் அடிப்படையானதும்,

மறுக்கவொண்ணாததுமான சுயநிர்ணயக் கோட்பாட் டுக்கு அமைய மொழிவாரி அரசுகளின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கன ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்துமாறு கேட்டுக் கொள்கிறது. இது நாடாளுமன்ற மூலம் தந்தை செல்வா நடத்திய போராட்டம்.

இக் கருத்துக்களுக்கும் சிங்களத் தலைமை சிந்திக்கத் தவறியதை தொடர்ந்து அகிம்சை வழியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தார். 1956 ஜுன் மாதம் 5 ஆம் திகதி காலிமுகத்திடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தை பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தின் மேல் மாடியில் இருந்து பார்த்துக் கொண்டிருக்க, சிங்களக் குண்டர்கள் சத்தியாக்கிரகிகள் குண்டாந்தடிகளால் தாக்கி சத்தியாகிரகத்துக்கு இடையூறு விளைவித்தனர்.

தாக்கப்பட்டபோதும் தமிழ்த் தலைவர்களும், தொண்டர்களும் அவ்விடத்தைவிட்டு அசையவில்லை. தாக்கப்பட்ட அமிர்தலிங்கம் இரத்தக்கறையுடன் நாடாளு மன்றம் சென்று உரையாற்றினார். காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் தமிழர் பிரச்சினையை சர்வதேசத்துக்குக் கொண்டு சென்றது.

1961 இல் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் வடகிழக்குத் தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைத்தது. தமிழக மக்களிடையே புதிய எளிச்சியை ஏற்படுத்தியது. இந்திய அரசைச் சிந்திக்க வைத்தது.

அகிம்சை வழிப் போராட்டத்தில் தமிழர் தாயகத்தில் அதாவது வடகிழக்கில் அரசின் நிர்வாகம் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது. தமிழர் பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டது. அதிக உயிரிழப்புக்கள் இன்றித் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமை என்ற ஆயுதத்தால் இலங்கை அரசை அதிர வைத்த நிகழ்வே 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம்.

தந்தை செல்வா தலைமையில் நடைபெற்ற இந்த மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் இராணுவத்தால் முறியடிக்கப்பட்டாலும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றி. அது தந்தை செல்வாவின் சாதனை.

1956 இல் தந்தை செல்வாவின் ஏற்பாட்டில் நடை பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருமலை யாத்திரை, அதைத் தொடர்ந்து திருகோணமலை தலைநகரில் நடைபெற்ற மாநாட்டில் விடுக்கப்பட்ட அறைகூவலால் ஏற்பட்டதே பண்டா – செல்வா ஒப்பந்தம்.

அதன் மூலம் ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்தார். ஒப்பந்தம் பின்வருவனவற்றை உறுதி செய்தது.

1. தமிழர் தாயகம் வடக்கும் – கிழக்கும் என்பதை ஏற்கச் செய்தல்.
2. தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்தல்.
3. தமிழ்மொழியை தேசியமொழியாக்குதல்.
4. வடக்கிலும் கிழக்கிலும் தமிழில் நிர்வாகத்தை ஏற்படுத்துதல்.
5. இலங்கையின் தேசிய சிறுபான்மையினரின் மொழியாகத் தமிழை அங்கீகரிக்கச் செய்தல்.
6. பிரஜா உரிமைப் பிரச்சினையை மீளாய்வு செய்யச் செய்தல்.
7. சுயநிர்ணய உரிமை பிரதேசங்களை இணைக்கும் உரிமை மூலம் உள்ளே கொண்டு வரப்பட்டது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கண்டி

தொடர்ச்சி▼

# தலைசிறந்த அரசியல் தலைவராக மதிக்கப்பட்டவர் தந்தை செல்வா!

**தொடர்ச்சி▲**

யாத்திரை, பௌத்த பிக்குகளின் எதிர்ப்பு என்பவற்றால் ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டாலும் தந்தை செல்வாவின் சமஸ்டி அடிப்படையில் ஒப்பந்தம் உருவானது ஒரு முதல்படி. அது தந்தை செல்வாவின் சாதனை.

அடுத்து 1965 இல் டட்லி சேனநாயக்காவுடன் செய்து கொண்ட இரண்டாவது ஒப்பந்தம் மற்றுமோர் சாதனை. 24-03-1965 இல் டட்லி – செல்வா கையொப்பமிட்ட ஒப்பந்தம். டட்லி சேனநாயக்கா ஒப்புக்கொண்டவை. இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டவை.

1. வடக்கு,கிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கும் அவற்றைத் தமிழிலேயே பதிவதற்கும் தமிழ்மொழி விசேட விதிகளுக்கு அமைய உடனே நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரு தமிழ் பேசும் குடிமகன் நாடு முழுவதிலும் தமிழிலேயே காரியமாற்ற உரிமையுள்ளவன் என்பதே தன் கட்சியின் கொள்கை என்பதையும் சேனநாயக்கா விளக்கினார்.

2. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சட்டபூர்வ நடவடிக்கைகளை நடாத்தவும், அவற்றைப் பதிவதற்கு தமிழ், நீதிமன்ற மொழியாக இருப்பது தன் கட்சியின் கொள்கையென்று சேனநாயக்கா ஏற்றுக் கொள்கிறார்.

3. இரண்டு தலைவர்களின் பரஸ்பர சம்மதத்தின் பேரில் மக்கள் பாலுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப இலங்கையில் மாவட்ட சபைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் தேசிய நன்மை கருதி சட்டங்களுக்கமைய மாவட்ட சபைகளுக்கு மேலான அதிகாரங்கள் அரசாங்கத்துக்கு உண்டு என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4. இலங்கைப் பிரஜைகள் காணிப்பங்கீடுகளில் காணி பெறும் வண்ணம் காணி அபிவிருத்தி விதிகள் திருத்தியமைக்கப்படும்.

இந்த ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டாலும் சமஸ்டி அடிப்படையிலான தீர்விற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் இணங்கியது ஒரு வரலாறு. தவிர சிங்கள தலைமையுடன் இணைந்து பங்காளியாக இருந்தால் அவர்கள் தமிழர் உரிமையை வழங்குவர் என்ற ஒரு பகுதியினரின் கருத்து இந்த தேசிய அரசாங்கம் மூலம் முறியடிக்கப்பட்டது.

தந்தை செல்வாவின் அகிம்சை வழி அணுகுமுறைக்குக் கிடைத்த இரண்டாவது சாதனை இதுவாகும். தந்தை செல்வாவை ஏமாற்றிய டட்லி சேனநாயக்காவின் கட்சி 1970 இல் படுதோல்வி அடைந்தது.

1960 ஜூலையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு பண்டா–செல்வா ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று கொடுத்த உறுதிமொழியே டட்லி சேனநாயக்கா அரசை வீழ்த்தி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை அமர்த்த வழிவகுத்தது.

தந்தை செல்வா இரண்டாவது தடவையாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பண்டா – செல்வா ஒப்பந்தத்தை அங்கீகரிக்க வைத்ததன் மூலம் தந்தை செல்வா சாதனை படைத்தார். தேர்தலில் அமோக வெற்றியீட்டிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசு கொடுத்த வாக்கை நிறைவேற்றவில்லை. ஏமாற்றி விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

சிங்களத் தலைமைகளிடையே ஏமாற்றும் படலம் ஊறிப்போன விடயம். டி.எஸ்.சேனநாயக்கா தொடக்கம் ஆட்சிக்கு வந்த திரு.மகிந்த ராஜபக்ஸ வரை தமிழ்த் தலைமைகளை ஏமாற்றியவர்களாகவே வரலாறு பதித்துள்ளனர்.

1960 தேர்தலின் பின் தமிழரின் போராட்ட முறையில் பெரும் மாற்றத்தைச் செய்தார். புதிய யுத்திகளை பரீட்சித்தார். அரசாங்கத்தை ஆக்குவது, அரசாங்கத்தை அழிப்பது, அரசாங்கத்தில் இணைவது.

1960 தேர்தல் முடிவுகள் அச்சந்தர்ப்பத்தை அளித்தது. தமிழ் மக்கள் சுயமரியாதையுடன் வாழ வழிசெய்யும் சுயாட்சி அரசை அமைக்கும் தன்னோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இந்த ஜனநாயக வழிகளை பயன்படுத்தி நடவடிக்கை எடுத்தார்.

அது சுதந்திர இலங்கையில் தமிழர் தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு கையாண்ட நான்காவது உத்தி. முதலாவது ஒத்துழைப்பு ஜி.ஜி.பொன்னம்பலத்துடன் இணைந்திருந்த காலத்தில், அவர் அரசுடன் சேர்ந்து ஒத்துழைத்து தமிழர் பிரதேசத்தைப் பாதுகாக்கலாம் என்று டி.எஸ்.சேனநாயக்கா அரசுடன் ஒத்துழைத்த காலத்தில் தமிழரின் நிலப்பறிப்பு தீவிரமடைந்தது. மலையகத் தமிழ் மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது.

இரண்டாவது சாத்வீகப் போராட்டம் தமிழரின் உரிமைகள் பறிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்கு சுயாட்சியைப் பெற்றுக் கொடுக்க இந்த உத்தியை தந்தை செல்வா கையாண்டார்.

1956 ஜூன் 05 ஆம் திகதி காலிமுகத்திடலில் நடத்திய சாத்வீகப் போராட்டமே இதுவாகும். பாரததேசத்துக்கு விடுதலையைப் பெற்றுக்கொடுக்க மகாத்மாகாந்தி சாத்வீக வழியில் போராடினார். இந்தச் சத்தியாக்கிரகத்தை தந்தை செல்வா மேற்கொண்டார்.

அதன் மகிமையை உணராத சிங்கள அரசும் சிங்களக் குண்டர்களும் பலாத்காரத்தை மேற்கொண்டு சத்தியாக்கிரகிகளை அடித்து வெருட்டினார்கள். அமிர்தலிங்கம் இரத்தக்கறையுடன் நாடாளுமன்றம் சென்று இந்த அடாவடித்தனத்தை எடுத்துக் கூறினார். 1961 இல் வடக்குக் கிழக்குத் தமிழர்களை அணிதிரட்டி மாபெரும் சாத்வீகப் போராட்டத்தை நடத்தினர். அந்த சத்தியாக்கிரகப் போராட்டம் சிங்கள இராணுவத்தால் முறியடிக்கப்பட்டது.

தந்தை செல்வாவின் சாத்வீகப் போராட்டமும் வெற்றியளிக்கவில்லை. நாலாவது உத்தி அரசாங்கத்தை ஆக்குவதும் அழிப்பதும். 1960 மாச்சில் தந்தை செல்வா, டட்லி சேனநாயக்க அரசாங்கத்தைக் கவிழ்த்தார். 1960 ஜூலையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசு உருவாக உதவினார். உதவியவரை ஸ்ரீமாவோ அம்மையார் உதறித் தள்ளினார். இதுவும் தந்தை செல்வாவுக்கு ஏமாற்றம்.

ஐந்தாவது உத்தி அரசாங்கத்தில் பங்கு கொண்டமை. 1965 இல் ஐ.தே.கட்சி தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு தந்தை செல்வா ஆதரவளித்தார். பின்வரும் கோரிக்கையின் அடிப்படையில் அரசாங்கத்தின் பங்காளியாகச் சேர்ந்த தந்தை செல்வா மூன்று ஆண்டுகளின் பின் டட்லியும் ஏமாற்றி விட்டார். ஐந்தாவது உத்தியிலும் தந்தை செல்வா தோல்வி கண்டார்.

ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டி அரசியல் அடிப்படையில் அதிகாரப் பகிர்வுடனான ஒரு சுயாட்சியைப் பெறுவதற்கு 30 வருடமாகப் அகிம்சை வழியில் போராடிய தந்தை செல்வா சிங்கள ஆட்சியாளரால் ஏமாற்றப்பட்ட பின்னர் மாற்று வழியாக, தமிழீழக் கோரிக்கையை வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது.

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையையும் ஒரு தேசிய இனத்துக்கான அடிப்படை உரிமைகளும் சிங்கள அரசாங்கங்கால் மறுக்கப்பட்டதால் தந்தை செல்வா தமிழீழக் கோரிக்கையை முன்னெடுத்தார். அதற்கான ஆயுதப் போராட்டம் தற்போது தோல்வியடைந்த நிலையில், மீண்டும் ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பம் சிங்கள அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

போர் வெற்றியின் மமதையில் அரசு தட்டிக் கழிக்குமாயின், ஐக்கிய நாடுகள் சபை மூலம் தமிழீழம் மலரும் என்பது உறுதி.

அன்னார் காலமாகும் முன்னர் தனது 79 ஆவது வயதில் ‘கடவுள்தான் இனி தமிழ் பேசும் மக்களைக் காப்பாற்ற வேண் டும்”என்றார். அது இன்றும் தொடர் கதையாகச் செல்கிறது.

# சித்தர் சடையம்மா சுவாமிகளுக்கு 170 ஆண்டுகளின் பின் திருக்கோவில்

**ஈழத்தின் முதல் பெண் சித்தர் சடையம்மாவுக்கு திருநெல்வேலி கிழக்கில் திருக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது. அவருடைய திருவுருவ சிலை பிரதிஷ்டை நாளை (31) திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**



கலாநிதி
சின்னத்தம்பி பத்மராஜா


திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா நாளை (31) திங்கட்கிழமை காலை 9.15 மணி முதல் 10.40 வரையான சுபமுகூர்த்த நன்னாளில் நடைபெறவுள்ளது.

இதன் சிறப்பம்சமாக ஈழத்தின் முதல் பெண் சித்தர் யாழ்ப்பாணத்து நல்லூர் சடையம்மா சுவாமிகளுக்கு புதிதாக ஆலயம் அமைக்கப்பட்டு அவரது திருவுருவச்சிலை பிரதிஷ்டையும் இடம்பெற உள்ளது.

சித்தர் சடையம்மா சுவாமிகள் அவதரித்த ஊரில் 170 ஆண்டுகளின் பின்னர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும்.

சடையம்மா சுவாமிகள், 19.08.1865 ஆம் ஆண்டு





கீரிமலை உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள சடையம்மா சமாதி

ரோகினி நட்சத்திரத்தில் வீரகத்திப்பிள்ளை – சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் மகளாக முத்துப்பிள்ளை எனும் பிள்ளைத் திருநாமத்துடன் அவதரித்தார். தனது 11 ஆவது வயதில் நந்தி கோத்திரத்தை சேர்ந்த கதிரேசு என்பவரைத் திருமணம் செய்து இல்லற வாழ்வை ஆரம்பித்தார். இரு பெண் பிள்ளைகளின் தாயாக விளங்கிய இவர் அப்பர் சுவாமிகளது வாக்குக்கு அமைய 'தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என்பதற்கமைய சரியைத் தொண்டு புரிந்து இறையாசி பெற்று வரும் நாளில், இமைப்பொழுதும் இறைநாமத்துடன் இல்லறத்தில் துறவற நிலையை பேணி காதலாகி கசிந்து கண்ணீர் மல்க ஆலயந்தானும் அரன் எனத்தொழுமே என்பதற்கு அமைய பக்தி யோகி ஆகிவரும் நாளில் இவரது கணவர் நோய்வாய்ப்பட, அது நீங்க நல்லூரான் வாசல் சென்று அவனையே தஞ்சம் எனக் கொண்டு அங்கேயே தங்கியிருந்து சரியைத் தொண்டாற்றினார்.

இந்தக் காலத்திலே காசி, இராமேஸ்வரம், முதலான தென்னிந்திய திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு இயற்றி கங்கை, காவேரி, சரஸ்வதி ஆகிய திரிவேணி சங்கமத்தில் புனித தீர்த்தமாடி ஆன்மீக அறிவு கைவரப் பெற்று பதிஞானம், பசு ஞானம் கைவரப் பெற்று அது முதிரப்பெற்று ஞானயோகியானார். மெல்ல மெல்ல இல்லற வாழ்வை நீக்கி துறவற வாழ்வை ஏற்கும் நாளில் வாலையம்மனின் அருட்பார்வையால் யோகம் கைவரப் பெற்றார்.

வாலை என்னும் குண்டலினி யோக பயிற்சியால்தத்தம் உடலில் உள்ள தெய்வங்களை மனக் கண்ணால் கண்டார். அட்டாங்க யோகத்தில் பிரணாயமம், தியானம், சமாதி ஆகியவை கைவரப் பெற்றநிலையில்யோகம்கைவரப் பெற்ற இவர் அண்டத்தில் உள்ளதை பிண்டத்தில் காண்பவராகி நெற்றியில் சதாசிவனையும் கழுத்திலே மகேஸ்வரனையும் நெஞ்சிலே உருத்திரனையும் உந்தியிலே விஷ்ணுவையும் மூலத்திலே பிரம்மனையும் காணும் ஆற்றல் கைவரப் பெற்றார். தியான நிலையில் இறைவன் திருவுருவை கண்டு இன்புற்றும், அருவத்தியானம் சமாதி நிலைக்கு வழி செய்யும் எனவே இது கைவரப் பெற்று தியான யோகியானார்.

இந்த நிலையில் தன் மாங்கலயத்தை கழற்றி கணவனிடம் கையளித்து குடும்ப வாழ்வைத் துறந்து மக்கள் பணி ஆற்றத் தலைப்பட்டு சமூக நோக்கோடு நல்லூர் தேரடிமடம், கதிர்காம மடம், கீரிமலை மடம் முதலியவற்றை ஈழத்திலும் கடல் கடந்து திருச்செந்தூர் சென்று அங்கேயும் மடம் அமைத்து பசித்தோர் முகம் பார்த்து அன்னதானப் பணி புரிந்தார்.

இவர் மனதால் நினைப்பதை அடியவர் தாமாகவே வழங்கிப் பேருதவி புரிந்தனர். பொன்னும் பொருளும் வாரி வழங்கினர். மடங்கள் அமைத்துப் பணி புரிந்தார். சுவாமி இராமகிருஷ்ணரின் பொன் மொழிக்கு ஏற்ப 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்' என்பதை மெய்ப்பித்தார். வள்ளலார் சுவாமிகளின் திருஞானக் கோட்டம் போல் உணவும் உறையுளும் வழங்கி உலமாந்தரை உய்வித்தார். நாடிவரும் அடியவர் தம் மனக் கவலைகளை நீக்கினார்.

இந்த நிலையில் அடிக்கடி தியான நிலைக்குச் சென்றுவரும் இவர் ஈழத்து சித்தர் பரம்பரையின் மூலவர் ஆகிய கடையில் சுவாமிகளிடமும் பால்குடி பாபா சுவாமிகளிடமும் தீட்சை பெற்று அவர்களையே குருவாக ஏற்று முற்றும் துறந்த ஞானி ஆகினார். இந்த நிலையில் அடிக்கடிதலைவீங்கும். இவரின்யோகம் அடங்க தலை வீக்கம் குறையும். இந்த நிலையில் தலை முடி நீண்டு நிலத்தைத் தொடும் அளவு வளர்ந்து சென்றதால் அடியவர்கள் இவரை சடையம்மா என்று அழைத்தனர். காரைக்கால் அம்மையாரைப் போலவே பிற்காலத்தில் வெண்ணிற ஆடை தரித்து தலைவிரி கோலமாக

தொடர்ச்சி ▼

# சித்தர் சடையம்மா சுவாமிகளுக்கு 170 ஆண்டுகளின் பின் திருக்கோவில்

தொடர்ச்சி ▲

பூமியைத் தொட்ட தலைமுடியுடன் அடியவர் பலருக்கும் அருளாசி வழங்கினார். மன ஒருமைப்பாட்டுடன் கடையிற் சுவாமியின் குருவுபதேசமாகிய 'கந்தனை மறவாதே அவனே நமது சொந்தம்' என்பதை ஏற்று முருக பக்தையாகினார். மன ஒருமைப்பாட்டின் இறுதி நிலை சமாதியாகும் இந்நிலையில் பக்குவப்பட்ட ஆன்மா பூரணத்துள் கலந்து ஒன்றாகிவிடும். இந்நிலை கைவரப்பெற்ற இவர் சித்தர் பரம்பரையுள் ஒன்றாகினார்.




இவர் தனது சித்தத்தை சிவன்பால் வைக்க ஏற்ற புண்ணிய இடமாக கீரிமலை எனும் நகுலேஸ்வரத்தை தெரிவு செய்து அங்கு மடம் அமைத்துத் தங்கி இருந்து பணியாற்றத் தொடங்கினார். ஆன்மீக உயர் இடமாகிய இவ்விடத்திலே கடல் அலை மோதும் பிதிர்க்கடன் நிறைவேற்றும் இடம் என்பன ஒருங்கே அமைந்த சிறிய மலையிலே தங்கி சித்தர்கள், ஞானிகளின் ஆன்மீக தேடலுக்குரிய இடமாக்கினர். நந்தவனம் அமைத்தார். இப்பணியை நல்லூர் ஆலயம், நல்லூர் சட்டநாதர் ஆலயம், திருநெல்வேலி வாலையம்மன் ஆலயம் போன்றவற்றிலும் மேற்கொண்டார்.

இத்தனை சிறப்புமிக்க இவர் 1936 ஆம் ஆண்டு சுக்கிரவார அனுச சட்சத்திரமன்று தான் ஏற்கனவே கூறியபடி உச்சி வீங்கி தலை பிளந்து சமாதியானார். இவரின் சமாதியானது யோகர் சுவாமிகளின் தலைமையில் கீரிமலையில் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு நிலத்தின் கீழே உள்ள நிலக்கீழ் அறையில் சமாதி வைக்கப்பட்டது. இவரது சடையின் ஒரு பகுதி எடுக்கப்பட்டு கதிர்காமம், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் சமாதி வைக்கப்பட்டது.

இவரின் சமாதிக்கு மேலாக கிழக்கு திசை நோக்கி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வடக்கு நோக்கி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இவரது சமாதிக்கு அருகே குழந்தைவேல் சுவாமிகளது சமாதி அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இவரது சமாதியானது எவ்வித சேதமின்றி அப்படியே காட்சியளிக்கிறது. இவரது சமாதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருவுருவ சிலைகள் பாதுகாப்பாக ஓரிடத்தில் இருப்பதாக அறிய முடிகின்றது. இவரது மடங்கள் இயங்க முடியாமலும், பெயர் மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் உள்ளன. இது சைவத் தமிழ் உலகுக்குப் பெரும் இழுக்கானது.

இந்த நிலையில் நல்லூர் சடையம்மா மடத்தில் பணியாற்றிய பௌராணிகர் சி. தம்பிஐயாவால் 1975 ஆம் ஆண்டளவில் அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் கொட்டகை அமைத்து அவரின் பணிகளை ஆற்றி 63 மெய்யடியார்களதும் 9 தொகை அடியார்களதும் குருபூசைகளை நடத்தி வந்தார். இந்தக் கைங்கரியம் கைகூடவே, வளர்ச்சியடைந்து 2000 ஆம் ஆண்டு இந்த மடம் விஸ்தரிக்கப்பட்டு 63 அடி நீள மடம் அமைத்து சின்னத் தலைமை வாத்தியார் எனப்பட்ட ச. நடராசா வாத்தியாரால் திறந்து வைக்கப்பட்டது.

நாளொரு வண்ணமும் இந்தப் பணி வளர்ச்சியுற்று 2025 ஆம் ஆண்டில் லிங்கம் அறக்கட்டளை ஸ்தாபகரது பேருதவியால் முதன் முதலில் சடையம்மாவுக்கு ஆலயம் அமைக்கப்பட்டு சடையம்மாவின் சமாதி மண் எடுத்துவரப்பட்டு அதன்மீது சடையம்மா சுவாமிகளின் கருங்கல்லாலான திருவுருவச் சிலையையும் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது.

இவரது வாழ்க்கை வரலாறு உள்ளடக்கிய சமாதிப்பாக்களை சரவணையைச் சேர்ந்த ஆ. தில்லைநாதபிள்ளை என்பவர் 1957 ஆம் ஆண்டு பண்டிதர் சோ. சபாபதிப்பிள்ளையின் முகவுரையுடன் திருச்செந்தூர் ஆ. நெல்லை வடிவேற்பிள்ளை யின் அணிந்துரையுடனான 60 பாக்கள் கொண்ட சிறுநூலை வெளியிட்டுள்ளார். ஆத்மஜோதி நா. முத்தையாவும் ஈழத்து சித்தரில் ஒருவராக சடையம்மாவை குறிப்பிட்டு நூல் எழுதியுள்ளார்.

இவ்விரு ஆக்கங்களையும் மற்றும் பேராசிரியர் மா. வேதநாதனுடைய ஆய்வுக் கட்டுரையையும் கலாநிதி எஸ். பத்மராஜாவுடைய கட்டுரையையும் உள்ளடக்கி கும்பாபிஷேக சிறப்பு மலரும் வெளியிடப்படுகிறது.

இதேவேளை, முன்னாள் விரிவுரையாளர் ப. கணேசலிங்கம், பேராசிரியர் விக்னேஸ்வரி பவநேசன் முதலியோர் ஆய்வு மற்றும் நினைவுப் பேருரைகளில் சடையம்மா பற்றி குறிப்பிட்டுள்ளமையும் நோக்கத்தக்கதே.

இது தவிர மூதறிஞர் க.சி. குலரத்தினம், இவரது அற்புதங்கள் பற்றிய சிறப்பையும் தாளையடி மு. சபாரத்தினம் என்பவர் பிள்ளைப்பேறு இல்லாதவர்களுக்கு இவர் வரமளித்து பிள்ளைப் பாக்கியம் கிடைத்தமையை வைத்து 'சடையம்மா' எனும் சிறு கதையை எழுதி இருப்பதும் நோக்குதற்கு உரியன.

19 ஆம் நூற்றாண்டில் ஒரு துணிச்சலான பெண் ஆளுமையாக ஈழத்திலும் பாரதம் சென்றும் சமய, சமூகப் பணியை ஒரு பெண் தொடர்வது என்பது நினைத்துப் பார்க்கமுடியாத ஒன்று. அதனை நிதர்சனமாக்கித் தனக்குக் கீழே ஒரு மடாதீனத்தையும் காரியக் கமிட்டியையும் நிறுவி பல்வேறு இடங்களிலும் நிறுவிய மடங்களை ஒருங்கிணைத்து பணியாற்றிய ஒரு பேராளுமையாக சித்துக்கள் கைவரப்பெற்ற பெண்ணாக ஆன்மீகப் பணி புரிந்தமை ஆய்வுப் புலத்திலே மதிப்பீடு செய்யப்படவேண்டிய ஒன்றாகும்.

ஈழத்துக்கும் நல்லூருக்கும் பெருமை சேர்ந்த ஒரு பெண்ணாக சைவத் தமிழ் உலகு ஏற்று அவரின் பணியை வெளிக் கொணர்ந்து அவர் வழி பயணிப்பது காலத்தின் தேவை எனலாம்.





# சொந்த நாட்டுக்குத் திரும்பும் அகதிகளது வாழ்வாதாரம் தொடர்பில் கலந்துரையாடல்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து, உள்நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக நாட்டை விட்டு இடம் பெயர்ந்து இந்தியாவில் வாழும் அகதிகள் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பி நிலையாக வாழ்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

கடந்த புதன்கிழமை (26) ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யு .ஜி.எம் ஹேமந்தகுமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு திரும்புவர்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளான, வசிப்பதற்கான காணி, அடிப்படை ஆவணங்கள், வாழ்வாதாரம், நாடு திரும்பிய பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு, நிரந்தர வீட்டுத்திட்டம் , சுகாதார வசதிகள், சமூக ஒருங்கிணைவு போன்றவை மக்களுக்கு தடையின்றி கிடைப்பதற்குரிய தீர்வுகள் பெறல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இக் கலந்துரையாடல் நடைபெற்றது என்று ஒபர் நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவி செல்வி . சின்னதம்பி சூரியகுமாரி கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் ஒபர் நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தனியார் கல்வி நிறுவன வகுப்புகள் அக்கரைப்பற்றில் இடைநிறுத்தம்!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அக்கரைப்பற்று மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இயங்கி வருகின்ற தனியார் கல்வி நிலையங்களின் கல்விச் செயற்பாடுகள் மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸின் அறிவுறுத்தலுக்கு அமைவாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இங்குள்ள தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் மாணவர்களின் பெற்றோர்கள், சமூக அமைப்புக்கள் மற்றும் சமய நிறுவனங்களின் முறையீடுகள் மற்றும் கோரிக்கைகளின் பேரில் நோன்புப் பெருநாள் உள்ளிட்ட பண்டிகைகள் மற்றும் சமய அனுஸ்டானங்களுக்கு இடம் கொடுக்கும் முகமாக அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் தங்களது கல்வி நடவடிக்கைகளை ஏப்ரல் 15 ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு விஷேட அறிக்கை மற்றும் கடிதம் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம்முறை கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் கடந்த காலங்களில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு பரீட்சைக்குத் தோற்றியமையால் ஏற்பட்டுள்ள உடல் உள அழுத்தங்களுக்கு ஆறுதலளிக்கும் வகையிலும் க.பொ.த. உயர்தர கல்விக்கான துறையை அவர்கள் சுயமாக தீர்மானம் எடுப்பதற்கும் இடமளிக்கும் வகையிலும் இந்த விடுமுறை அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரத்துக்கான கல்விச் செயற்பாடுகளை ஏப்ரல் 30 ஆம் திகதி வரை காலதாமதம் செய்யுமாறும் அவர் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

# கல்முனை கடற்கரைப் பிரதேசங்களுக்கு மின்னொளியூட்ட மாநகர சபை நடவடிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட கடற்கரைப் பிரதேசங்களில் மக்கள் ஒன்று கூடும் பல முக்கிய இடங்களுக்கு மின்விளக்குகளால் ஒளியூட்டப்பட்டுள்ளன.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு கடற்கரைப் பகுதிகளுக்கு வருகை தருகின்ற பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களைக் கருத்தில் கொண்டும் குற்றச் செயல்களை தடுக்கும் நோக்கிலும் கல்முனை மாநகர சபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது என்று மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தெரிவித்தார்.

இதன் பிரகாரம் விஷேடமாக ஒரு தொகுதி பிரகாச மின்விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு, அவை கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சாய்ந்தமருது தொடக்கம் பெரிய நீலாவணை வரையான கடற்கரைப் பிரதேசங்களில் மக்கள் பொழுதுபோக்குக்காக ஒன்று கூடும் பகுதிகளில் துரிதமாக பொருத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.



கடற்கரை வீதியில் ஏற்கனவே பொருத்தப்பட்டிருக்கும் தெரு விளக்குகளுக்கு மேலதிகமாக கடற்கரைப் பகுதிகளை நோக்கியதாக இந்த புதிய மின்விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# முஸ்லிம் சமய, கலாசார திணைக்கள வருடாந்த இப்தார் நிகழ்வுகள்

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

முஸ்லிம் சமய, கலாசார திணைக் களத்தின் ஏற்பாட்டில், வருடாந்த இப்தார் நிகழ்வு திணைக்கள வளாகத்தில் இடம்பெற்றது.

முஸ்லிம் சமய கலாசார திணைக் களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப், பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலிஹ், தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

பௌத்த, கிறிஸ்தவ, இந்து திணைக் களங்களின் பணிப்பாளர்கள் மற்றும் முன்னாள் பணிப்பாளர்கள், புத்த சாசன அமைச்சின் அதிகாரிகளும், இந்து, கிறிஸ்தவ திணைக்களத்தின்



ஊழியர்கள், பள்ளிவாசல் சம்மேளனங் களின் தலைவர்கள், சர்வ மதத் தலை வர்கள் கலந்து கொண்டனர்.

திணைக்களத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும், விருந் தினர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொணடனர்.

திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ். எம் நவாஸ் வரவேற்புரையை நிகழ்த் தியதோடு, பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலிஹ், பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் ஆகியோரும் உரையாற்றினர்.

மௌலவி இர்ஷாத் ஹ°மைதி விசேட உரை ஆற்றினார். நன்றி உரை திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.என். பிர்னாஸ் நிகழ்த்தினார்.



# தலை மன்னார் ஊர் மனை பகுதியில் உள்ள காட்டில்18 மில்லியன் ரூபா மதிப்புள்ள கஞ்சா!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

தலை மன்னார் ஊர் மனை பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் 18 மில்லியன் ரூபா மதிப்புள்ள கேரள கஞ்சா பொதிகள் நேற்று (29) இரவு மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து தலைமன்னார் பகுதியில் நடத்தப்பட்ட சிறப்பு சோதனையில் தலைமன்னார் ஊர்மலை பகுதியில் மறைத்து வைக் கப்பட்டிருந்த கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

18 மில்லியன் ரூபா மதிப்புள்ள 85 கிலோ 200 கிராம் கேரள கஞ்சா பொதிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் போதைப்பொருள் இந்தி யாவிலிருந்து கடல் வழியாகக் கொண்டு வரப்பட்டிருப்பது தெரியவந்துள் ளது.

மீட்கப்பட்ட போதைப் பொருள் மேலதிக விசாரணைக்காக தலை மன்னார் பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டது.

# யாருடைய கூட்டணிக்காகவும் அ.தி.மு.க. துடிக்கவில்லை

## செல்லூர் ராஜு கூறுகின்றார்



யாருடைய கூட்டணிக்காகவும் அ.தி.மு.க. துடிக்கவில்லை என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு தெரிவித்துள்ளார்.

மதுரை மேற்கு தொகுதிக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“தி.மு.க. கூட்டணி கொள்கை கூட்டணி என்பது சுத்த பொய். அது சூட்கேஸ் கூட்டணி.

நடிகர் விஜய் தற்போதுதான் களத்துக்கு வந்துள்ளார். தனது கட்சித் தொண்டர்களை உற்சாகப்படுத்த தி.மு.க.- த.வெ.க. இடையே போட்டி என்றுதான் சொல்வார். தி.மு.க. எப்படியெல்லாம் வேஷம் போடுகிறது என்பதைதான் விஜய் அவரது கட்சி பொதுக்குழுவில் பேசியுள்ளார். அவர் அ.தி.மு.கவை பற்றி விமர்சனம் செய்யவில்லை.

கூட்டணிக்கு இன்னும் காலம் இருக்கிறது. நாங்கள் யாருடைய கூட்டணிக்காகவும் துடிக்கவில்லை. யாரும் போய்விடாதீர்கள் என்று நாங்கள் சூட்கேஸ்/ம் கொடுக்கவில்லை. கூட்டணி பற்றி கற்பனையாக கருத்து சொல்ல முடியாது. அ.தி.மு.க. தலைமையில்தான் கூட்டணி அமையும் என்று பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக சொல்லிவிட்டார். அமித் ஷா சந்திப்பையும் தெளிவாக கூறிவிட்டார்.

மக்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள். எடப்பாடி பழனிசாமி முதல்வராக பங்கேற்க போகிறார். ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவுப் பணியாளர்கள், அரசு ஊழியர்கள் அதிமுகவுக்கு வாக்களிக்க தயாராகிவிட்டார்கள். எடப்பாடி பழனிசாமி கரோனா காலத்தில் கூட அரசு ஊழியர்களுக்கு ஊதியத்தை குறைக்காமல் முழு ஊதியத்தையும் கொடுத்தார்.

விவசாயிகளும் ஆதரவு தெரிவிக்கிறார். செங்கோட்டையன், அ.தி.மு.க. அமைப்பு செயலாளராக உள்ளார். தமிழக கலாச்சாரம், எல்லோரையும் சந்திப்பது, மதிப்பது. நிர்மலா சீதாராமன் ஒரு தமிழர். மதுரையில் பிறந்தவர். அவரை செங்கோட்டையன் சந்தித்ததில் என்ன தவறு இருக்கிறது. அ.தி.மு.கவுக்கு செல்வாக்கு அதிகரிப்பதை சகித்துக் கொள்ள முடியாதவர்களும், தேர்தல் வியூகத்தை பார்த்து கதறுபவர்களும் கற்பனையாக குழப்பம் விளைவிக்க பல்வேறு வசந்திகளை பரப்பி கொண்டிருக்கிறார்கள்.” என்றார்.

# தி.மு.கவை எதிர்க்கும் எந்தக் கட்சியும் தேசிய ஜனநாயக கூட்டணியில் சேரலாம்

## டிடிவி.தினகரன் கருத்து



தி.மு.கவை எதிர்க்கும் எந்தக் கட்சியும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையலாம் என்று அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

மதுரை அவனியாபுரத்தில் நேற்று நடைபெற்ற கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற டிடிவி. தினகரன், செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“அ.ம.மு.க. ஏற்கெனவே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றுள்ளது. அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி டில்லி சென்று உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்துள்ளார். ஆனால், அந்த சந்திப்பு குறித்து வெளிப்படையாக பேசவில்லை. தி.மு.கவை எதிர்க்கும், தி.மு.க. வெற்றி பெறக் கூடாது என்று கருதும் எந்தக் கட்சியும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையலாம்.

தி.மு.கவுக்கு மாற்று த.வெ.க. என்று விஜய் கூறியிருப்பது, அவரது விருப்பம் மட்டுமே. தமிழகத்தில் உண்மையான எதிர்க்கட்சியாக மக்கள் மனதில் இருப்பது தேசிய ஜனநாயகக் கூட்டணிதான். சுயநலம், பதவி வெறியாலும், தி.மு.க. மீதுள்ள பயத்தாலும், தங்கள் மீது வழக்கு பதிவு செய்யக்கூடாது என்பதற்காகவும், தி.மு.க. தேர்தலில் வெற்றி பெற சிலர் மறைமுகமாக உதவி வருகின்றனர்.

காங்கிரஸ் ஆட்சியைவிட பா.ஜ.க. ஆட்சியில் தமிழகத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. ஆட்சியாளர்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அதை மறைப்பதற்காக மத்திய அரசு மீது திமுகவினர் பழி சுமத்துகின்றனர்.

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் டில்லியில் பா.ஜ.க. தலைவர்களை சந்தித்தது குறித்து எதுவும் தெரியாது. ஓ.பன்னீர்செல்வம் கட்சிக்கு துரோகம் செய்தார் என்று கூறும் பழனிசாமிதான் உண்மையில் துரோகத்தின் வடிவம். தனியாக கட்சி நடத்துவதால் நாங்கள் அ.தி.மு.கவில் இணைய வேண்டிய அவசியம் இல்லை.” என்றார்.

# அமெரிக்காவுடன் நல்லுறவு தற்போது நிறுவப்பட்டுள்ளது

## மெக்சிக்கோ ஜனாதிபதி

மெக்சிக்கோவின் ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம், அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்புச் செயலாளர் கிறிஸ்டி நோயமை சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பில் அமெரிக்காவிற்கும் மெக்சிக்கோவிற்கும் இடையிலான குடியேற்றம், பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ட்ரம்ப்பின் தலைமைத்துவத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள வரி அறிவிப்புகளுடன் உலகளாவிய வர்த்தகப் போர் தொடங்கியிருக்கும் நேரத்தில், மெக்சிக்கோவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே ஒரு நல்ல உறவு நிறுவப்பட்டுள்ளதாக மெக்சிக்கோவின் ஜனாதிபதி தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டிருந்தார்.



மேலும்அமெரிக்கஉள்நாட்டுபாதுகாப்புச் செயலாளருடனான இந்த சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது எனவும் அவர் அந்த பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

# சர்வதேச தொழில்நுட்ப உதவியை எதிர்பார்க்கிறது தாய்லாந்து!



பாங்கொக்கில் கட்டடம் இடிந்து விழுந்ததில் சுமார் 50 பேர் காணாமல் போயுள்ளனர் என தாய்லாந்து துணைப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலஅதிர்வையடுத்து தாய்லாந்தின் பாங்கொக் பகுதியில் உள்ள கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தது.

இடிந்து விழுந்த கட்டடத்தை பார்வையிட நேற்று தாய்லாந்து துணைப் பிரதமர் சென்றிருந்தார்.

இந்த கள விஜயத்தின் போது ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறியிருந்தார்.

இதேவேளை தாய்லாந்தின் அண்டை நாடுகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தற்போது உதவிகள் கிடைத்துள்ளதாகத் தாய்லாந்து துணைப் பிரதமர் குறிப்பிட்டார்.

தம்மிடம் போதுமான மனித வளம் உள்ளதாகவும் எனவே தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டால், நிச்சயமாக அதனை ஏற்றுக்கொள்ளத் தயார் எனத் தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்டடம் இடிந்து விழுந்தமைக்கான காரணங்கள் உள்ளடக்கிய அறிக்கை ஒரு வாரத்திற்குள் வெளியிடப்படும் எனவும் தாய்லாந்து துணைப் பிரதமர் கூறியுள்ளார்.

# மியன்மாரில் உயிரிழந்தோரின் எண்ண்ணிக்கை மேலும் உயரும்

## செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு

மியன்மார் நிலஅதிர்வில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது

18 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நிலஅதிர்வினால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர் என செஞ்சிலுவைச் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி மக்கள் பாதுகாப்பான தங்குமிடம், சுத்தமான குடிநீர், சுகாதாரப் பாதுகாப்பு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



பக்கங்கள் - 3

# கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 30/03/2025

## அமெரிக்க கனடா உறவுகளில் நிரந்தரமான விரிசல் ஏற்படும்

### ஒலிவியா செள தெரிவிப்பு



C2 ▶



# சீரற்ற காலநிலை தொடர்பில் டொரொன்டோவில் எச்சரிக்கை




டொரொன்டோ மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகள் இந்த வார இறுதியில் கடுமையான புயலை எதிர்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த புயல் மழை, உறைமழை ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

டொரொன்டோ தற்போது சிறப்பு காலநிலை அறிவிப்பின் கீழ் உள்ளது, மேலும் யார்க் மற்றும் டர்ஹாம் பகுதிகளுக்கு உறைமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முதலில் மழை தொடங்கும், பின்னர் உறைமழையாக மாறும். குளிர்ச்சியான நிலை காரணமாக சில பகுதிகளில் உறைமழை நீண்ட நேரம் தொடரலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

C2 ▶

# ட்ரம்பின் செயற்பாட்டால் கனேடிய குடியுரிமை பெறுவதற்கு விரும்புகின்றனர் அமெரிக்கர்கள்

ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியானதிலிருந்தே சில நாடுகளுடன் வர்த்தகப்போரில் இறங்கியுள்ளார்.

அத்துடன், கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக மிரட்டிக்கொண்டே இருக்கிறார்.

அவர் கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக மிரட்டிக் கொண்டிருக்கும் நிலையில், அவர் நாட்டு மக்களில் சிலரோ, தாங்கள் கனேடிய குடியுரிமை பெற விரும்புவதாக தெரிவித்துள்ளார்கள்.

சமீபத்திய ஆய்வொன்றில், அமெரிக்கர்கள் கனடாவுக்குச் சென்று கனேடிய குடியுரிமை பெற விரும்புவது தெரியவந்துள்ளது.

அமெரிக்கர்களில் ஐந்தில் ஒருவர் தாங்கள் கனேடியர்களாக ஆக விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.



ஆய்வொன்றில் பங்கேற்ற அமெரிக்கர்களில் 20 சதவிகிதத்தினர், தங்கள் மாகாணத்தைக் கனடாவுடன் இணைக்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன், வெறும் 9 சதவிகிதம் அமெரிக்கர்கள் மட்டுமே கனடா அமெரிக்காவுடன் இணைக்கப்படலாம் என தெரிவித்துள்ளார்களாம்.



# அமெரிக்கா-கனடா உறவுகளில் நிரந்தரமான விரிசல் ஏற்படும்

## ஒலிவியா செள தெரிவிப்பு

அமெரிக்கா-கனடா அரசியல் உறவு மீண்டும் பழைய நிலைக்கு திரும்புமா? – உறுதியாக சொல்ல முடியாது" என டொராண்டோ மேயர் ஒலிவியா செள தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அரசுகளுக்கு இடையே நம்பிக்கை இருக்கும் என்றே சொல்ல முடியாது. அதுதான் பயங்கரமான விஷயம் எனத் தெரிவித்துள்ளார்.

டொராண்டோ நகரம் புதிய பொருளாதார திட்டத்தை ஒப்புக்கொண்டுள்ளது. 8.8 மில்லியன் டொலருக்குள் உள்ள கட்டுமான ஒப்பந்தங்கள் - 100 வீதம் கனடிய நிறுவனங்களுக்கே வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

353,000 டொலருக்கு குறைவான பொருள்கள், சேவைகள் – கனடிய நிறுவனங்களுக்கு மட்டும் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார். நாம் எங்கள் சொந்த பொருள்களை தயாரித்து, நம்மையே நம்பும் சூழல் உருவாகும் என செள மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்பின் முடிவுகள் எப்போது என்ன ஆகும் என்று கணிக்க முடியாது. நம்பிக்கையில்லாமல் உறவு எப்படி இருக்கும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

---

**சீரற்ற காலநிலை...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

டொரொன்டோவில் 3 முதல் 5 மில்லி மீற்றர் வரை உறைமழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மின்சாரத் தடைகள் எனவும் பாதைகள் வழுக்கும் தணமையுடன் காணப்படலாம் எனவும் மற்றும் மரக்கிளைகள் முறிந்து விழக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# இந்திய வம்சாவளியினர் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டதற்கான காரணம் வெளியானது




இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டதற்கான காரணம் வெளியாகியுள்ளது.

கனடாவில் பொதுத்தேர்தல் நெருங்கிவரும் நிலையில், இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரா ஆர்யா தேர்தலில் போட்டியிட ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி தடை விதித்தது.

எதனால் அவர் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டது என்பதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படாமலே அவர் தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில், சந்திரா ஆர்யா தேர்தலில் போட்டியிட ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி தடை விதித்தது ஏன் என்பதற்கான காரணம் தற்போது வெளியாகியுள்ளது.

ஆர்யா இந்திய அரசுடன் தொடர்பு வைத்துள்ளதாக கூறப்படுவதாலேயே தேர்தலில் அவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

புடழடிந யனெ ஆயடை என்னும் கனேடிய ஊடகம் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில், ஆர்யா கடந்த ஆண்டு ஆகத்து மாதம் இந்தியா சென்றதாகவும், இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்த நிலையில், ஆர்யா தனது பயணம் குறித்து கனடா அரசுக்கு தெரியப்படுத்தவில்லை என கூறப்படுகிறது.

# போதை மருந்து பயன்பாட்டால் ஏற்படும் மரணங்கள் அதிகரிப்பு

சஸ்காடூனில், பேன்டனில் போதைப் பொருள் அதிகளவு பயன்படுத்தியதனால் இதுவரை 9 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சஸ்காடூன் நகர மன்றம், சுகாதாரத் துறை, பொலிஸ், தீயணைப்பு சேவை, மற்றும் பராமெடிக் குழுக்கள் இந்த பேரழிவை கட்டுப்படுத்த ஒன்றுகூடி உரையாடினர்.

நாள் தோறும் மித மிஞ்சிய போதைப் பொருள் பயன்பாட்டினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பிலான 19 அவசர அழைப்புக்கள் கிடைக்கப்பெறுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

சஸ்காடூன் தீயணைப்பு துறையினர் ஒவ்வொரு நாளும் சுமார் 19 போதைப் பொருள் விசமாதல் சம்பவங்களுக்கு பதிலளிக்கிறார்கள்.

மார்ச் 1 முதல் 18 ஆம் தேதி வரை 435 அவசர அழைப்புகளுக்கு அவர்கள் பதிலளித்துள்ளனர்.

இது கடந்த ஆண்டு முழுவதும் இருந்த 291 சம்பவங்களை விட அதிகம். மாகாண அரசு புதிய பராமெடிக் குழுவினரை சேர்த்துள்ளது.



மேலும் நாலோக்சோன் மருந்து கிட்களை அதிக அளவில் வழங்கி வருகிறது.

சாஸ்காசுவான் பொது பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவர் மார்லோ பிரிட்சர்ட், நாங்கள் எதிர்கால உயிரிழப்புகளை தடுக்கும் முயற்சியில் உள்ளோம் என்று அறிவித்தார்.

இந்த பேன்டனில் விஷத்தன்மை கொண்ட போதைப்பொருள் ரெஜினா, பிரின்ஸ் ஆல்பர்ட் போன்ற பகுதிகளுக்கு பரவக் கூடும் என்ற அச்சம் உள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதுவரை 25 பேர் பேன்டனில் போதைப் பாருள் கடத்தலில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டுள்ளனர்.